1655. இந்தியாவில் கீழ்க்கண்ட எந்த பிரதேசத்தில் தரமான செம்மறி ஆடுகள் வளர்க்கப் படுகின்றன?
A) வடமேற்கு பகுதி
B) மித வெப்ப இமயமலைப் பகுதி
C) தெற்குப் பகுதியின் அரைப்பாலைவனப் பகுதி
D) ஈரப்பத கிழக்குப் பகுதி
**(Group II – G2DT-2010)**

1656. இந்துஸ்தான் கப்பல்கட்டும் தளம் எங்கு அமைந்துள்ளது?
A) விசாகப்பட்டிணம் B) சென்னை
C) கொச்சி D) மும்பை
**(Group II – G2DT-2010)**

1657. இந்தியாவில் எங்கு ஆசியாவின் மிகப்பெரிய தொலைநோக்கி அமைக்கப்பட்டுள்ளது?
A) டார்ஜிலிங் - மேற்கு வங்கம்
B) கொடைக்கானல் - தமிழ்நாடு
C) மகாபலீஸ்வர் - மஹாராஷ்ட்ரா
D) காவலூர் - தமிழ்நாடு
**(Group I – RDGA-2010)**

1658. இந்தியாவில் எந்த பிராந்தியத்தில் நிலத்தடி நீர்வளம் உருவாக ஏதுவாக உள்ளது?
A) கோந்துவானா படிவப்பாறை பிராந்தியம்
B) தக்காணப் பீடபூமி பிராந்தியம்
C) கங்கை-பிரம்மபுத்திரா வண்டல் பிராந்தியம்
D) செனஸொயிக் படிவுப்பாறை பிராந்தியம்
**(Group I – RDGA-2010)**

1659. இந்தியாவில் இரும்புத்தாது படிவுகள் காணப் படுவது
A) பைலடிலா B) டும்கூர்
C) தார்வார் D) பன்ஸ்வாரா
**(Group I – RDGA-2010)**

1660. இவற்றுள் கால்வாய் பாசனத்தினை அதிகம் பயன்படுத்தும் மாநிலம் எது?
A) குஜராத் B) ஒரிசா
C) உத்திரப்பிரதேசம் D) ஹரியானா
**(Group I – RDGA-2010)**

1661. வகைப்படுத்துதல் என்பது இடம் அல்லது அமைவிடம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையும் எனில், அது ........ வகைப்பாட்டியல் என அழைக்கப்படும்.
A) எண்ணின் அடிப்படையிலான
B) பூகோள ரீதியான
C) பண்பின் அடிப்படையிலான
D) கால வரிசையான
**(Group I – RDGA-2010)**

1662. தமிழ்நாட்டின் மிக உயரமான சிகரம்
A) ஆனைமுடி
B) தொட்டபெட்டா
C) சேர்வராயன் குன்றுகள்
D) கொடைக்கானல்
**(Group I – RDGA-2010)**

1663. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க:

| பட்டியல்-I | பட்டியல்-II |
|---|---|
| a) கர்நாடகா | 1. பாபுதான் குன்றுகள் |
| b) ஒரிசா | 2. மயூர்பன்ச் |
| c) சட்டீஸ்கர் | 3. பைலடிலா |
| d) ஜார்கண்ட் | 4. போனை தொடர் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

**(Group I – RDGA-2010)**

1664. மேலைக்கடல் என்று பழங்காலத்தில் அழைக்கப்பட்ட கடல்
A) அட்லாண்டிக் பெருங்கடல்
B) பசுபிக் பெருங்கடல்
C) இந்தியப் பெருங்கடல்
D) ஆர்டிக் பெருங்கடல்
**(Group I – RDGA-2010)**

1655 ... B 1656 ....... A 1657 ....... D 1658 ....... C 1659 ....... A 1660 ....... C 1661 ....... B 1662 ....... B 1663 ....... A 1664 ....... A

**1665.** தெற்கு ஆசிய நாடுகளில் மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ள நாடு எது?

A) இந்தியா B) பாகிஸ்தான்

C) நேபாளம் D) ஸ்ரீலங்கா

**(Group I – RDGA-2010)**

**1666.** கிழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று **(A)** : கடல்மட்ட வெப்பநிலையானது வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்களால் கட்டுப் படுத்தப்படுகின்றது.

காரணம் **(R)**: வெப்ப நீரோட்டங்கள் வெப்ப நிலையினை அதிகரிக்கவும், அதேபோல் குளிர் நீரோட்டங்கள் வெப்ப நிலையினை குறைக்கவும் செய்கின்றது.

கிழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

C) (A) சரி, ஆனால் (R) தவறு

D) (A) தவறு, ஆனால் (R) சரி

**(Group I – RDGA-2010)**

**1667.** குதிரை குளம்பு போன்ற அல்லது வட்ட வடிவம் கொண்ட முருகைப் பாரின் பெயர்?

A) கங்கண வடிவ பார்கள்

B) கரை விலகிய பார்கள்

C) கரையோரப் பார்கள்

D) இவற்றுள் எதுவுமில்லை

**(Group I – RDGA-2010)**

**1668.** நிலம் ஒரு

A) மனிதனால் உருவாக்கப்பட்ட வளம்

B) புதுப்பிக்க இயலாத இயற்கை வளம்

C) புதுப்பிக்க இயலும் வளம்

D) இவை அனைத்தும்

**(Group I – RDGA-2010)**

**1669.** எமரால்டு அணை அமைந்துள்ள இடம்

A) கோயம்புத்தூர் B) ஊட்டி

C) ஈரோடு D) சேலம்

**(Group I – RDGA-2010)**

**1670.** ஹீலியோசென்டிரிக் தத்துவத்தின் படி சூரியன் மத்தியில் நிலையாக உள்ள போது மற்ற கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. இந்த தத்துவத்தை முதன் முதலில் கூறியவர்

A) கலிலியோ B) நியூட்டன்

C) டாலமி D) கோப்பர்நிக்கஸ்

**(Group I – RDGA-2010)**

**1671.** இந்தியாவில் 2001-ம் ஆண்டு புள்ளி விவர கணக்கின் படி மக்கள் தொகை வளர்ச்சி

A) 3% B) 2.5% C) 1.9% D) 1.5%

**(Group I – RDGA-2010)**

**1672.** பின்வருவனவற்றுள் குன்றுகளின் சரியான வரிசை எது? (வடக்கிலிருந்து தெற்காக)

A) நல்ல மலை, நீலகிரி, ஜவாதி, ஆனைமலை

B) ஆனைமலை, ஜவாதி, நீலகிரி, நல்லமலை

C) நல்ல மலை, ஜவாதி, நீலகிரி, ஆனைமலை

D) ஆனைமலை, நீலகிரி, ஜவாதி, நல்லமலை

**(Group I – RDGA-2010)**

**1673.** பட்டியல் Iஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி கிழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க:

| பட்டியல்-I | பட்டியல்-II |
|---|---|
| **a)** நியோஜோயிக் காலம் | 1. முதல்நிலை |
| **b)** செனோசிக் காலம் | 2. இரண்டாம் நிலை |
| **c)** மிசோஜோயிக் காலம் | 3. கால்நிலை |
| **d)** பேலியோஜோயிக் காலம் | 4. மூன்றாம் நிலை |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 4 | 3 | 1 | 2 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 1 | 2 | 4 | 3 |

**(Group I – RDGA-2010)**

1665 ... A 1666 ....... A 1667....... A 1668....... C 1669 ....... B 1670....... D 1671 ....... C 1672....... C 1673 ....... A

**1674.** பின்வருவனவற்றுள் கருப்பு நிற மண் அதிகமாக காணப்படும் பிரதேசம்

A) கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, திருநெல் வேலி
B) சேலம், தர்மபுரி, நீலகிரி
C) புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மற்றும் காவிரி டெல்டா
D) காவிரி டெல்டா, பாலாறு நீர்பிடிப்பு பகுதி மற்றும் பாண்டிச்சேரி

**(Group I – RDGA-2010)**

**1675.** தமிழ்நாட்டில், அதிக காடுகளைக் கொண்ட மாவட்டம் எது?

A) மதுரை B) கன்னியாகுமரி
C) சேலம் D) நீலகிரி

**(Group I – RDGA-2010)**

**1676.** கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:

கூற்று (A) : திடீரென நகரும் புவி ஒட்டினால் அல்லது புவியதிர் வினால் சுனாமி உருவாகிறது.

காரணம் (R) : சிஸ்மிக் (புவியதிர்வு) கடலலைகள் ஓத அலைகள் என தவறுதலாக அழைக்கப் படுகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
C) (A) சரி, ஆனால் (R) தவறு
D) (A) தவறு, ஆனால் (R) சரி

**(Group I – RDGA-2010)**

**1677.** கீழ்க்கண்டவற்றுள் சரியானவற்றை பொருத்துக :

| வகைகள் | | % பரப்பு (இந்தியா) |
|---|---|---|
| **I.** மலைகள் | - | 10.6 |
| **II.** பீடபூமிகள் | - | 27.7 |
| **III.** சமவெளிகள் | - | 43.2 |
| **IV.** குன்றுகள் | - | 18.5 |

இவற்றில் :

A) I மட்டும் சரியானது
B) I மற்றும் II சரியானவை
C) I, II மற்றும் III சரியானவை
D) அனைத்தும் சரியானவை

**(Group I – RDGA-2010)**

**1678.** நாட்டின் மொத்தப் போக்குவரத்தில் தரைவழிப் போக்குவரத்து

A) 20% B) 40%
C) 60% D) 80%

**(Group I – RDGA-2010)**

**1679.** இமயமலையின் வடகிழக்கு பகுதி 300 செ.மீ அதிகமாக மழை பெற காரணமாக இருக்கும் கிளை

A) வங்காள விரிகுடா கிளை
B) அரபிக்கடல் கிளை
C) காம்பே வளைகுடா கிளை
D) கொங்கன் கிளை

*(VAO – KALI - 2011)*

**1680.** இந்தியாவில் உள்ள மாநிலங்களில் பரப்பளவின் அடிப்படையில் தமிழ்நாடு ............ இடத்தை வகிக்கிறது.

A) பதினொன்றாவது B) இரண்டாவது
C) மூன்றாவது D) ஏழாவது

*(VAO – KALI - 2011)*

**1681.** 2001ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி, இந்திய மக்கள் தொகை

A) 1.027 பில்லியன் B) 1.037 பில்லியன்
C) 1.047 பில்லியன் D) 1.057 பில்லியன்

*(VAO – KALI - 2011)*

**1682.** ஆண்டிஸ் மலைத்தொடர் அமைந்துள்ள இடம்

A) வட அமெரிக்கா B) ஆசியா
C) தென் அமெரிக்கா D) ஆஸ்திரேலியா

*(VAO – KALI - 2011)*

**1683.** தலா வருமானத்தில் முதலிடம் வகிக்கும் மாநிலம்

A) ஒரிஸா B) பீஹார்
C) பஞ்சாப் D) குஜராத்

*(VAO – KALI - 2011)*

1674 ....A 1675 .... D 1676..... B 1677 .....D 1678 ....D 1679.... A 1680 .....A 1681.... A 1682 .... C 1683 .... C